**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 188 / 2016** |
| **Deposition of witness for** | : | **PW : 19** |
| **Name** | : | திருமதி. சுமித்ரா |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **25.07.2022**

**முதல் விசாரணை :**

நான் மதுரை, ஆயுதப்படை குடியிருப்பில் குடியிருந்து வருகிறேன். என் கணவர் பாண்டியராஜன் பிகிலர் காவலராக வேலை செய்து வருகிறார். வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது. ஆஜர் எதிரி எனது வீட்டின் அருகில் குடியிருந்தார். பி.பி. குளம், மீனாட்சி புரத்தில் நாங்கள் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு குடியிருந்த போது, எதிரி எங்கள் வீட்டில் வாடகைக்கு குடியிருந்தார். கடந்த 28ம் தேதி 2015ம் வருடம் மாதம் ஞாபகம் இல்லை. எதிரி என்னிடம் பணம் ரூ.10,000/- கைமாத்தாக வாங்கியிருந்தார். 2 நாட்கள் கழித்து 30ம் தேதி கொடுத்தார். 30ம் தேதி போலிசார் வந்து விஸ்வநாதன் என்னிடம் பணம் கொடுத்தாரா என்று கேட்டார்கள். அந்த பணம் ரூ.10,000/-ஐ போலிசார் என்னிடம் இருந்து வாங்கி சென்று விட்டார்கள். எதிரி விஸ்வநாதன் என்னிடம் நகை எதுவும் கொடுக்கவில்லை. கொலை நடந்துவிட்டதாக போலிசார் சொன்னார்கள். எங்கு கொலை நடந்ததாக சொல்லவில்லை. கொலையாளி ஆணா பெண்ணா என்று தெரியாது. போலிசார் என்னிடம் வந்து பணம் கேட்டபோது நான் ......

பதட்டமாகிவிட்டேன். அதனால் நான் கொலை பற்றி தெரிந்துகொள்ளவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)**

<u>அரசு தரப்பில் கு.வி.</u>

போாலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலிசார் விசாரணையில், கடந்த 31.07.2015 ம் தேதி இரவு சுமார் 07.00 மணியளவில் எதிரி விஸ்வநாதன் எனது வீட்டிற்கு வந்தார் என்றும், லெட்சுமி படம் பொறிக்கப்பட்ட இரண்டு தங்க காசு, இரண்டு தங்க குண்டு, ஒரு திருமாங்கல்யம், பணம் ரூ.9910/- ஆகியவற்றை என்னிடம் கொடுத்தார் என்றால் நகை எதுவும் கொடுக்கவில்லை. பணம் மட்டும் தான் கொடுத்தார். அதன் பிறகு விஸ்வநாதன் அவரது உறவினர் கௌரி என்பவரை விஸ்வநாதனும், அவரது நண்பர் முத்துக்குமார் என்பவரும் சேர்ந்து கொலை செய்துவிட்டு, பணம் மற்றும் நகைகளை என்னிடம் கொடுத்து வைத்தார் என்று பின்பு எனக்கு தெரியவந்தது என்றும், அதன் பிறகு 02.08.2015 ம் தேதி காலை 11.00 மணியளவில் SS காலனி காவல் ஆய்வாளர் அவர்கள் எதிரி விஸ்வநாதன் என்னிடம் பணம், நகை கொடுத்த விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. என் முன்னிலையில் மேற்படி நகை மற்றும் பணத்தை போலிசார் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள் என்று நான் சொன்னேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் அதசாஆ.11 அத்தாட்சியில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். போலிசார் என்னிடம் கொடுத்து காட்டி கையொப்பம் போடு என்று சொன்னார்கள். நான் கையொப்பம் போட்டேன். போலிசார் விசாரணையில் எதிரி என்னிடம் பணம் நகை கொடுத்தார் என்று சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் கு.வி.</u>**

எதிரி விஸ்வநாதன் என்னிடம் கைமாற்றாக பணம் வாங்கிவிட்டு, திரும்ப கொடுக்க 30ம் தேதி வந்தார். என்னிடம் பணம் ரூ.10,000/- முழுமையாக கொடுத்தார். நான் கையொப்பம் செய்யும் போது போலிசார் மேற்படி நகை மற்றும் பணத்தை ஏற்கனவே கொண்டு வந்து என்னிடம் கையொப்பம் போடச்சொன்னார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. என்னிடம் இருந்து பணம் மட்டும் தான் வாங்கினார்கள். பதட்டமாக இருந்ததால் எதுவும் தெரியவில்லை. போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் கையொப்பம் செய்தேன். வேறு எதுவும் தெரியாது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை